


**11. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டை பிளவுப்படுத்தும் சக்திகளுக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தேசத்தின் வளர்ச்சியில் வலிமையான ஆரோக்கியமான இளைஞர்கள் முக்கிய பங்களிப்பதாக மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. பொங்கல் விழா, தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துரைப்பதாக பி.ஜே.பி. தேசிய செயல்தலைவர் திரு. நிதின் நபின் கூறினார்.

4. தனித்துவமான விளையாட்டு போட்டிகளுக்கு அரசு ஆதரவு அளித்து வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

5. வதோதராவில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டை பிளவுப்படுத்தும் சக்திகளுக்கு எதிராக ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர்
திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் சோம்நாத் ஆலய சுவாபிமான் பர்வ் நிகழ்ச்சியில் இன்று பங்கேற்ற அவர், நாட்டு மக்களின் நம்பிக்கை, மீட்சிமை மற்றும் சுயமரியாதையை வெளிப்படுத்தும் நிகழ்வாக இக்கொண்டாட்டங்கள் அமைவதாக தெரிவித்துள்ளார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் படையெடுப்புகளால் சோம்நாத் ஆலயம் தகர்க்கப்பட்டதை எடுத்துரைத்த பிரதமர், இவ்வாலயத்தின் மறு புனரமைப்பிற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை நாடு என்றும் நினைவு கூறும் என்றார்.

தொடர்ந்து ராஜ்கோட்டில் இன்றுமாலை நடைபெறும் 2-வது எழுச்சிமிகு குஜராத் மண்டல மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர், அஹமதாபாத் காந்தி நகர் இடையேயான 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

சி.பி.ராதாகிருஷ்ணன்

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் 60-வது நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் ஜெய் ஜவான், ஜெய்

கிசான் முழக்கத்தின் மூலம் ராணுவ வீரர்கள் மற்றும் வேளாண் பெருமக்களுக்கு உத்வேகம் அளித்தவர் என குறிப்பிட்டுள்ளார்.

தன்னலமற்ற தியாகம், தேச ஒருங்கிணைப்பில் அன்னாரின் சிந்தனைகள் நம்மை வழிநடத்துவதாகவும் அவர் கூறினார்.

விடுதலை போராட்ட வீரர் கொடிகாத்த குமரனின் 94-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி அன்னாருக்கும் குடியரசு துணைத்தலைவர் அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியா – பிரான்ஸ் இடையே புத்தாக்கம், தொழில்நுட்பம், ஸ்டார்ட்அப், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்லப்படும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், லக்சம்பர்க்கில் நடைபெற்ற 31-வது வெளியுறவு தூதர்கள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

உலக அளவில் ஏற்படும் அரசியல் மாற்றங்களை சுட்டிக்காட்டிய அவர், நாடுகளின் சுயாட்சி வலிமையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக ஜெர்மனி, போலந்து நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்ததார்.

❖❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

வாழ்க்கையில் தலைமைத்துவத்திற்கு அவசியமான சமநிலையை சைக்கிள் பயணம் நமக்கு கற்றுத்தருவதாக மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 56-வது ஃபிட் இந்தியா ஞாயிறு சைக்கிள் இயக்கத்தில் இன்று பங்கேற்ற அவர், வலிமையான ஆரோக்கியமான இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்ற முடியும் என்றார்.

கடந்த ஆண்டு ஞாயிறு சைக்கிள் இயக்கம் தொடங்கப்பட்டபோது நாட்டின் 240 இடங்களில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றதை சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போது 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இது மாபெரும் மக்கள் இயக்கமாக மாறியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

வலிமை மற்றும் ஆரோக்கியத்தின் அவசியத்தை இளையோர் முன்னெடுத்து செல்வதால் இது சாத்தியமானதாக அவர் கூறினார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளைய தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்கும் ஆற்றல்மிகு இளைஞர்களும் இன்றைய ஞாயிறு சைக்கிள் இயக்கத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

புத்தக கண்காட்சி

53-வது சர்வதேச புத்தக கண்காட்சியை புதுதில்லி பாரத் மண்டபத்தில் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.

இந்திய ராணுவ வரலாறு ! வீரம் மற்றும் விவேகம் என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் வரும் 18-ம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் 35-க்கும் மேற்பட்ட நாடுகளின், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதிப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

கலை கலாச்சரம், திரைப்படம், குழந்தைகள் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை வாசிப்பதற்கான தேசிய மின்னணு நூலகமும் இந்த கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

நிதின் நபின்

வேளாண் தொழிலை போற்றும் பொங்கல் விழா தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துரைப்பதாக பி.ஜே.பி. தேசிய செயல்தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

கோவை வட வள்ளியில் இன்று நடைபெற்ற நம்ம ஊரு மோடி பொங்கல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தமிழுக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் பெருமை சேர்ப்பதாக கூறினார்.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி நமது கலாச்சார தொடர்பை வலுப்படுத்துவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கட்சியின் மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வரும் சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்றார்.

தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

செயற்கை கோள்

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் தயாரித்த EOS N1 புவி கண்காணிப்பு செயற்கை கோள் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் நாளைகாலை மணி 10.17க்கு PSLV C-62 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்துவதற்கான 24 மணிநேர கவுண்ட் டவுன் தற்போது நடைபெற்று வருகிறது.

EOS N1 செயற்கை கோளுடன் வெளிநாடுகளை சேர்ந்த துணை செயற்கை கோள்களும் விண்ணில் செலுத்தப்படுகின்றன.

இதையொட்டி பாதுகாப்பு காரணங்களுக்காக திருவள்ளூர் மாவட்ட மீனவர்கள் நாளை கடலுக்கு செல்ல தடைவிதித்து மீன்வளத்துறை உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

ட்ரயத்லான் விளையாட்டு போட்டிகள் சகிப்புத்தன்மை ஒழுக்கம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதாக துணை தலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கோவளத்தில் ஓட்டம், நீச்சல், மிதிவண்டி, ஓட்டுதல் ஆகியவை ஒருங்கிணைந்த இப்போட்டியை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த தனித்துவமான விளையாட்டு வடிவத்திற்கு ஆதரவு அளிப்பதில் தமிழகம் பெருமைக் கொள்வதாக கூறினார்.

விளையாட்டுகள் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு மட்டுமின்றி ஆரோக்கியம் உடற்தகுதியுடன் கூடிய நல்வாழ்விற்கும் பங்களிப்பதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம் இன்று அனைத்து வாக்குச்சாவடி மைங்களிலும் நடைபெறுகிறது.

ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு நடைபெறும் இம்முகாமில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களையும் மேற்கொள்ளலாம்.

வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 18-ம் தேதி வெளியிடப்படும் நிலையில் விடுபட்டோர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் தாட்கோ மூலம் நிலம் வாங்க நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகையை ஒட்டி கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4 கோடி ரூபாய் அளவிற்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஈரோடு மாவட்டம் பன்னாரி அம்மன் கோவில் அருகே சிறுத்தை நடமாட்டம் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு செல்லும் பக்தர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பிரகதி வாய்ஸ்

சேலம் மாவட்டத்தில் மத்திய அரசின் பிரகதி திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படுவது பெரிதும் பயனளிப்பதாக பொறியியல் மாணவி தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல் வாய்ஸ்

திண்டுக்கல் மாவட்ட சுற்றுலா தளங்களில் நுழைவு கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தும் முறை நாளை முதல் நடைமுறைக்கு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

மழை வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்துவரும் மழைக்காரணமாக நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கோவில்

இராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலில் மார்கழி மாத அஷ்டமி பிரதட்சனத்தை முன்னிட்டு இன்று ஸ்படிக லிங்க பூஜை நடைபெற்றது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

வதோதராவில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட்செய்யும் நியூசிலாந்து சற்றுமுன் 4 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 13 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற இந்தியா பந்துவீச தீர்மானித்ததது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி வரும் 14-ம் தேதி ராஜ்கோட்டிலும்,

3-வது இறுதிப் போட்டி வரும் 18-ம் தேதி இந்தோரிலும் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

நவி மும்பையில் நடைபெறும் மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் குஜராத் ஜெயன்ஸ் – டெல்லி கேப்பிட்டல்ஸை இன்றிரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

நொய்டாவில் நடைபெற்ற தேசிய குத்துச்சண்டை சாம்பியன் மகளிர் 80 கிலோ எடைப்பிரிவில் பூஜா ராணியும்,

52 கிலோ எடைப்பிரிவில் நிக்கத் ஸரினும்

48 கிலோ எடைப்பிரிவில் மீனாட்சி ஹூடாவும் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்திறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖